செ.வெ.எண்: 19 நாள்: 11.03.2021

பெரம்பலூர் மாவட்டம்

**100 சதவீத வாக்குப்பதிவினை வலியுறுத்தி விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் பங்கேற்ற விழிப்புணர்வு சைக்கிள் பேரணியினை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப.ஸ்ரீவெங்கட பிரியா இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து தொடக்கி வைத்தார்.**

100 சதவீத வாக்குப்பதிவினை வலியுறுத்தி விளையாட்டு வீரர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு சைக்கிள் பேரணியினை மாவட்ட ஆட்சியரகத்திலிருந்து **மாவட்ட தேர்தல் அலுவலர் /** மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப.ஸ்ரீவெங்கட பிரியா இ.ஆ.ப., அவர்கள் இன்று (11.03.2021) கொடியசைத்து தொடக்கி வைத்தார்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில்,

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, வாக்காளர்கள் 100 சதவீதம் வாக்களித்திடவேண்டும் என்பதனை வலியுறுத்தியும், ஜனநாயகக் கடமையினை முறையாக, நேர்மையாக நிறைவேற்றிட பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டும் என்பதற்காக பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

இந்தியா உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு. ஜனநாயக நாட்டின் நம்மை வழிநடத்தும் தலைவர்களை தேர்ந்தெடுக்கும் உரிமையினை ஜனநாயகம் நமக்கு வழங்கியுள்ளது. அந்த அடிப்படையில் வாக்காளர்கள் ஆகிய நாம் ஒவ்வொருவரும் வாக்களிப்பதன் மூலம்தான் ஜனநாயகத்தை ஏற்படுத்த முடியும். ஜனநாயக திருவிழாவான தேர்தலன்று நாம் வாக்களிப்பதன் மூலம்தான் நம்மை வழிநடத்தும் தலைவர்களை தேர்ந்தெடுக்க முடியும்.

தன்னுடைய வாக்கு ஒரு வாக்குதானே என்றல்லாமல் ஒவ்வொருவரின் வாக்கும் மிக முக்கியம் என்பதனையும் வெற்றி, தோல்வியை தீர்மானிக்கும் ஆயுதமாகவும் உள்ளது. இந்த வாக்கின் மூலம்தான் வருங்காலத்தின் நம்மையும், நமது மாநிலத்தையும் பாதுகாக்கக்கூடிய, வழிநடத்தக்கூடிய சிறந்த தலைமையை ஏற்படுத்த முடியும். வாக்குரிமை கொண்ட ஒவ்வொருவரும் நேர்மையாகவும், எவ்வித நிர்பந்தங்களுக்குட்படாமலும், நியாயமாகவும், வெளிப்படைத் தன்மையுடனும் வாக்களித்திட வேண்டும். இதன்மூலம் நமக்கான உரிமையை நிலைநாட்டி ஜனநாயகத்தை பாதுகாத்திட வேண்டும். இந்திய திருநாட்டின் நமக்கான தலைவரை தேர்ந்தெடுக்க வழங்கப்பட்டுள்ள உரிமையினை சரியாக முறையை பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

எனவே அனைவரும் வரும் சட்டமன்ற பொதுத்தேர்தலின்போது தவறாது வாக்களித்து தமது ஜனநாயக கடமையை ஆற்றிட வேண்டும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப.ஸ்ரீவெங்கடபிரியா, இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

இப்பேரணியின்போது விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் தங்களது மிதிவண்டியில் வாக்களிப்பது ஒவ்வொருவரின் கடமை, கண்ணியத்துடன் வாக்களிப்போம், முகக்கவசம் அணிந்து சமூக இடைவெளியுடன் வாக்களிப்போம், வாக்குரிமை நமது அடிப்படை உரிமை, வாக்களிப்பது ஜனநாயக கடமை, வாக்களித்திடுவீர் ஜனநாயகத்தை காத்திடுவீர், வாக்கின் வலிமை தேசத்தின் வலிமை, வாக்களிப்போம் வாழ்வுரிமை காப்போம், எனது வாக்கு! எனது உரிமை! 100 சதவீதம் வாக்களிக்க தயாராகுங்கள் ஆகிய வாசகங்கள் அடங்கிய விழிப்புணர்வு பதாகைகளை ஏந்திக்கொண்டும், முழக்கமிட்டவாறும் வருவாய் வட்டாட்சியர் அலுவலகம் வரை சென்று பேரணி முடிவுற்றது.

இப்பேரணி துவக்க விழாவின்போது மாவட்ட கூடுதல் தேர்தல் அலுவலர் / மாவட்ட வருவாய் அலுவலர் திரு.செ.ராஜேந்திரன், பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் திருமதி ஜெ.இ.பத்மஜா இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் திரு. சுப்பையா, ஊடகச் சான்று மற்றும் கண்காணிப்புக் குழு பொறுப்பு அலுவலர் /செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு. ஏ.கே. நாகராஜபூபதி, வட்டாட்சியர்கள் திரு.சின்னதுரை, திருமதி நூர்ஜஹான் மற்றும் விளையாட்டு விடுதி மேலாளர் திருமதி ஜெயக்குமாரி, தடகளப் பயிற்றுநர் திருமதி கோகிலா உள்பட பலர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், பெரம்பலூர்.**